பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 03 2025 7 15
செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1) குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரண்டு நாள் பயணமாக இன்று பஞ்சாப் மற்றும் யூனியன்பிரதேசமான சண்டிகருக்கு செல்கிறார்.

2) மொரீஷியஸ் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டு அதிபர் திரு. தரன் கோகுலை சந்தித்து உரையாடுகிறார்.

3) இந்தியா – அர்மேனியா இடையேயான உறவு மிகவும் உறுதியானது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4) விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை பிரதமர் அறிவித்ததன் மூலம் நாட்டின் வேளாண் பொருட்களின் உற்பத்தி அதிக அளவை எட்டியுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

5) உலக பாரா தடகள கிராண்ட் பிரிக்ஸ் போட்டிகள் தில்லியில் இன்று தொடங்குகின்றன.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரண்டு நாள் பயணமாக இன்று பஞ்சாப் மற்றும் யூனியன்பிரதேசமான சண்டிகருக்கு செல்கிறார்.

பஞ்சாப் மத்திய பல்கலைக்கழகம் மற்றும் பதிண்டாவில் உள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் அவர் பங்கேற்கிறார்.

மத்திய பல்கலைக்கழகத்தில் ஆயிரத்து 31 முதுநிலைப் பட்டதாரிகளுக்கும், 60 ஆய்வாளர்களுக்கும் அவர் பட்டங்களை வழங்குகிறார்.

எய்ம்ஸில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் 72 இளநிலை மருத்துவர்களுக்கு பட்டங்களை வழங்குகிறார்.

இன்று மாலை மொஹாலியில் நடைபெறும் சிறப்பு வரவேற்பு நிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்கிறார்.

இதில் பஞ்சாப், ஹரியானா மாநில ஆளுநர்கள் மற்றும் முதலமைச்சர்கள் கலந்துகொள்கின்றனர்.

நாளை சண்டிகரில் நடைபெறும் பஞ்சாப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிலும் குடியரசுத்தலைவர் கலந்துகொண்டு பட்டங்களை வழங்குகிறார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக மொரீஷியஸ் புறப்பட்டுச் சென்றார்.

போர்ட் லூயிசில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

**Sir Seewoosagur Ramagoolam** தாவரவியல் பூங்காவிற்குச் செல்லும் அவர், அங்குள்ள **Sir Seewoosagur Ramagoolam** மற்றும் **Sir Anerood Jugnauth** நினைவிடங்களில் அஞ்சலி செலுத்திய பிறகு மரக்கன்றுகளை நடுகிறார்.

அதன் பின்னர் அந்நாட்டின் அதிபர் திரு. தரன் கோகுலை சந்தித்து உரையாடுகிறார்.

இன்று மாலை இந்திய வம்சாவளியினர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியில் அவர் கலந்துரையாடுகிறார்.

அந்நாட்டு பிரதமர் திரு. நவீன்சந்திர ராமகூலத்தையும் அவர் சந்தித்து உரையாடுகிறார்.

மொரீஷியஸ் நாட்டின் தேசிய தினம் நாளை கொண்டாடப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பு நடைபெறுகிறது.

மேலும் இந்திய கடற்படையின் போர்க்கப்பல் ஒன்றும் பங்கேற்கிறது.

இந்த பயணத்தின்போது இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் பல்வேறு ஒப்பந்தங்களில் இருநாட்டுத் தலைவர்கள் கையெழுத்திடுகின்றனர்.

<<<<>>>>

இந்தியா – அர்மேனியா இடையேயான உறவு மிகவும் உறுதியானது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி வந்துள்ள அர்மேனியா வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Ararat Mirzoyan** திரு. ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார்.

இந்தியாவில் முதன்முதலாக அர்மேனிய செய்தித்தாள் வெளியிடப்பட்டதை திரு. ஜெய்சங்கர் நினைவுகூர்ந்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் மற்றும் பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்புகள் அதிகரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

நடப்பாண்டு கரீப் பருவத்தில் வேளாண் உற்பத்தி ஆயிரத்து 664 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயரும் வாய்ப்புள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரபி பருவத்தில் வேளாண் உற்பத்தியானது ஆயிரத்து 645 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு அதிகரித்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரீப் பருவ நெல் உற்பத்தியானது ஆயிரத்து 206 லட்சம் மெட்ரிக் டன்னாக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துவரை உற்பத்தி 115 புள்ளி மூன்று ஐந்து லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளதாகவும் வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கைகளை வெளியிட்ட மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில் வேளாண் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்ததன் மூலம் வேளாண் பொருட்களின் உற்பத்தி அதிக அளவை எட்டியுள்ளதாக அவர் கூறினார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் ஷிவ்புரில் மாதவ் புலிகள் சரணாலயத்தை அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் திறந்து வைத்தார்.

இந்த சரணாலயத்தை சுற்றிப் பார்ப்பதற்காக ஜீப் வசதியையும் அவர் நேற்று தொடங்கி வைத்தார்.

இது மத்தியப்பிரதேச மாநிலத்தின் 9வது புலிகள் சரணாலயமாகும். ஆயிரத்து 651 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்த சரணாலயம், நாட்டிலேயே மிகப்பெரிய 5வது சரணாலயமாகும்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா, புலிகளைப் பாதுகாப்பதற்காக 58 சரணாலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதில் 9 சரணாலயங்கள் மத்தியப்பிரதேச மாநிலத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சரணாலயங்கள் அமைப்பதன் மூலம் புலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

சர்வதேச விண்வெளிய ஆய்வு மையத்தில் கடந்த 9 மாதங்களாக ஆய்வில் ஈடுபட்டு வரும் இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் விண்வெளி வீரர் **Bari Willmore** ஆகியோர் வரும் ஞாயிற்றுக்கிழமை பூமிக்குத் திரும்புவார்கள் என்று நாசா தெரிவித்துள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் விண்கலம் மூலமாக அவர்கள் பூமிக்குத் திரும்ப உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் 5ஆம் தேதி விண்வெளி நிலையத்தில் 8 நாட்கள் ஆய்வுகளை செய்வதற்காக இந்த இருவரும் பயணம் செய்தனர்.

அவர்களை அழைத்துச் சென்ற போயிங் நிறுவனத்தின் ஸ்டார் லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக அவர்கள் பூமிக்குத் திரும்புவது ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன தலைவர் திரு. எலன் மாஸ்கிடம் விண்வெளியில் நீண்ட நாட்களாக இருந்து வரும் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோரை பூமிக்கு அழைத்து வர வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து தற்போது இந்த இருவரும் மார்ச் 16ஆம் தேதி புவிக்குத் திரும்ப இருப்பதாக நாசா கூறியுள்ளது.

<<<<>>>>

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் உள்ள இங்கிலாந்து தூதரகத்தில் பணியாற்றி வரும் இரண்டு தூதரக அதிகாரிகளை உடனடியாக வெளியேறுமாறு ரஷ்யா தெரிவித்துள்ளது.

போலியான அடையாளங்களைக் காண்பித்து இந்த இரண்டு அதிகாரிகளும் ரஷ்யாவில் உளவு பார்த்து வருவதாக அந்நாடு குற்றம் சாட்டியுள்ளது.

இதுபோன்ற அத்துமீறல்களை அனுமதிக்க முடியாது என்று ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே இந்த குற்றச்சாட்டுகளை இங்கிலாந்து வெளியுறவு அமைச்சகம் மறுத்துள்ளது.

இதுபோன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இதற்கு முன்பும் ரஷ்யா தெரிவித்துள்ளதாக இங்கிலாந்து கூறியுள்ளது.

இதனையடுத்து இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

<<<<>>>>

ரஷ்யாவுடன் சண்டையிட்டு வரும் யுக்ரைனுக்கு ஆதரவாக சர்வதேச பாதுகாப்பு படையை ஏற்படுத்துவதற்காக 30 நாடுகளைச் சேர்ந்த ராணுவ அதிகாரிகள் ஃபிரான்ஸ் தலைநகர் பாரீசில் இன்று கூடி ஆலோசனை நடத்துகின்றனர்.

இந்த பாதுகாப்புப் படையை ஃபிரான்சும், இங்கிலாந்தும் தலைமை ஏற்று நடத்த உள்ளன.

போர்நிறுத்தத்திற்குப் பிறகு ரஷ்யா, யுக்ரைன் மீது தாக்குதல் தொடுக்குமானால் அதை தடுத்து நிறுத்த இந்தப் படை உதவும் என்று ஃபிரான்ஸ் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலக பாரா தடகள கிராண்ட் பிரிக்ஸ் போட்டிகள் தில்லியில் இன்று தொடங்குகின்றன.

இந்தியா உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்த 280 வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.

இப்போட்டி வரும் 13ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 9 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய மும்பை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 179 ரன் எடுத்தது.

180 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி 20 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 170 ரன் மட்டுமே எடுத்தது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் மும்பை – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – சுவீடனின் **Andre Goransson** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 3-6, 7-6, 10-8 என்ற செட் கணக்கில் பெல்ஜியத்தின் **Sander Gille** - போலந்தின் **Jan Zielinski**-ஐ இணையை வென்றது.

<<<<>>>>

**All England** பேட்மிட்டன் போட்டி இன்று பர்மிங்ஹாமில் தொடங்குகிறது.

இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் தனீஷா கிரஸ்டோ – அஸ்வினி பொன்னப்பா இணை இன்று தைவான் இணையை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் இந்தியாவின் ரங்கி ரெட்டி - ஷிராக் ஷெட்டி இணை, லக்ஷயா சென், ஹெச்.எஸ். பிரனாய், பி.வி. சிந்து, மால்விகா பன்சோட் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா இன்று ஜப்பானின் **Satsuki Odo**-ஐ எதிர்கொள்கிறார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பஞ்சாப் மற்றும் முகமதன் அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டம் டிரா ஆனது.

இரு அணிகளும் தலா 2 கோல் அடித்தனர்.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**